<u>தொழிலாளர் நீதிமன்றம். காஞ்சிபுரம்</u>

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **ID.No.** | **:** | 38/2021 | சாட்சியம் | **:** | **WW1** |
| **Name** | **:** | சரவணன் | | | |
| **Date** | **:** | **08.11.2024** | | | |
| **Time** | **:** | **11.42 a.m to 12.46 p.m** | | | |

<u>தொ.த.சா.**1.**திரு. சரவணன் என்பவர் இன்று ஆஜர் செய்யப்பட்டு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார். குறுக்கு விசாரணை</u>

நான் எதிர்மனுதாரர் நிறுவனத்தில் 05.04.2017-ல் பயிற்சியாளராக சேர்ந்தேன் என்றால் ஆமாம்.மற்ற தொழிற்தாவாவில் உள்ள மனுதாரர்கள் எந்த தேதியில் பயிற்சியாளராக சேர்ந்தார்கள் என்ற விவரம் எனக்கு தெரியாது. அனைவருக்கும் 24 மாதங்கள் பயிற்சி கொடுக்கப்பட்டது என்றால் ஒரு சிலருக்கு ஒரு வருடம் மட்டுமே பயிற்சி கொடுக்கப்பட்டது. ID.21/2021 மனுதாரர் பூவரசன் 16 மாதங்கள் பயிற்சியாளராக இருந்தார் என்றால் தெரியாது. ID.27/2021 மனுதாரர் வினோத்குமார் 12 மாதங்கள் பயிற்சியாளராக இருந்தார் என்றால் தெரியாது. ID.28/2021 மனுதாரர் யுவராஜ் 14 மாதங்கள் பயிற்சியாளராக இருந்தார் என்றால் தெரியாது. ID.31/2021 மனுதாரர் தீபக், ID.34/2021 மனுதாரர் மணிகண்டன், ID.37/2021 மனுதாரர் விக்னேஷ் ஆகியோர் 14 மாதங்கள் பயிற்சியாளராக இருந்தார்கள் என்றால் தெரியாது. 20.04.2019 தேதியிட்ட உத்தரவுப்படி 6 மாதத்திற்கு தகுதிகாண் பருவத்தில் வைக்கப்பட்டேன்

என்றால் ஆமாம். ID.16/2021 மனுதாரர் அருண் 13.03.2019 தேதியிட்ட உத்தரவு முன்னிலைக்கு தகுதிக்காண் பருவத்தில் வைக்கப்பட்டார் என்றால் தெரியாது. மற்ற மனுதாரர்கள் எந்த தேதியில் தகுதிக்காண் பருவத்தில் வைக்கப்பட்டார்கள் என்ற விவரம் தெரியாது. தகுதிக்காண் பருவத்தில் எங்களின் செயல்திறன் நிர்வாக தரப்பில் மதிப்பீடு செய்யப்படும் என்பது பற்றி தெரியுமா என்றால் தெரியாது. தகுதிக்காண் பருவத்தில் வைக்கப்படுவதற்கு வழங்கப்பட்ட உத்தரவில் எங்களுடைய செயல்திறன் திருப்திகரமாக இல்லாத பட்சத்தில் பணிநீக்கம் செய்யப்படுவார்கள் என கண்டுள்ளது என்றால் ஆமாம். பயிற்சி காலத்தில் பயிற்சி எதுவும் கொடுக்கப்படாமல் நாங்கள் நேரடி உற்பத்தி பணியில் ஈடுபடுத்தப்பட்டோம் என்பது சம்பந்தமாக தொழிற்தாவா எதுவும் எழுப்பவில்லை என்றால் ஆமாம். நான் டிப்ளமோ இன் மெக்கானிக்கல் படித்து உள்ளேன். மற்ற மனுதாரர்கள் என்ன படித்துள்ளார்கள் என தெரியாது. நான் 2016 இல் படிப்பை முடித்தேன். எதிர்மனுதாரர் நிறுவனம் பிளாஸ்டிக் மோல்டிங் அசெம்பிளி ,பெயிண்டிங் ஆகியவை செய்து வருகிறார்கள். அவை ஆட்டோமொபைல் தொழிற்சாலைக்கு பயன்படுத்தக்கூடிய பொருட்கள் என்றால் ஆமாம். பயிற்சியாளராக நான் சேர்வதற்கு முன்னர் அங்கு இருந்த இயந்திரங்களை இயக்கியது இல்லை என்றால் ஆமாம். எதிர்மனுதாரர் நிர்வாகத்தில் பயிற்சியாளராக சேர்வதற்கு முன்னர் நான் Same Deutz Private Limited கம்பெனியில் அசெம்பிளி ஒர்க் செய்து வந்தேன். எதிர் மனுதாரர் நிறுவனத்தில் எந்த மாதிரியான இயந்திரங்கள் இருந்தன என்றால் Injection moulding

Machine, Assembly Machine ஆகியவை இருந்தனர். அவை Fully ஆட்டோமேட்டிக் செமி ஆட்டோமேட்டிக் மெஷின் என்றால் ஆமாம். மேற்படி இயந்திரங்களை எவ்வாறு இயக்க வேண்டும் என்பதை எதிர் மனுதாரர் நிர்வாகத்தில் வந்து தான் தெரிந்து கொண்டேன் என்றால் ஆமாம். ஆனால் வேலைக்கு சேர்ந்த முதல் நாளே எனக்கு அசெம்பிளி ஒர்க் கொடுக்கப்பட்டது. பிரமாண வாக்குமூல சாட்சியம் அளிப்பதற்கு முன்னர் நான் பயிற்சி எதுவும் கொடுக்கப்படவில்லை என தெரிவித்து எந்த நீதிமன்றத்திலோ அலுவலகத்திலோ மனு எதுவும் கொடுக்கவில்லை என்றால் ஆமாம். மனுதாரர்கள் அனைவரின் செயல்திறன் பணி திருப்திகரமாக இல்லாத காரணத்தினால் பணிநீக்கம் செய்யப்பட்டார்கள் என்றால் இல்லை. பழிவாங்கும் நடவடிக்கையாக தான் பணிநீக்கம் செய்யப்பட்டார்கள். 27.08.2019 தேதியிட்ட உத்தரவில் என்னுடைய பணிக்காலம் திருப்திகரமாக இல்லாத காரணத்தினால் பணிகாலம் முடிவுக்கு கொண்டுவரப்படுவதாக சொல்லப்பட்டுள்ளது என்றால் ஆமாம். மற்ற மனுதாரர்களுக்கும் இதே வாசகம் கொண்ட உத்தரவு வழங்கப்பட்டுள்ளது என்றால் ஆமாம். நான் என்னுடைய தகுதிகாண் பருவத்தில் மொத்தம் 107.5 நாட்கள் வேலை பார்த்து உள்ளேன் என்றால் எத்தனை நாட்கள் என சரியாக தெரியவில்லை. ID.16/2021 மனுதாரர் அருண் அவரின் தகுதி காண் பருவத்தில் மொத்தம் 134.5 நாட்கள் வேலை செய்துள்ளார் என்றால் தெரியாது. ID.19/2021 மனுதாரர் தினகரன் அவரின் தகுதி காண் பருவத்தில் மொத்தம் 123.5 நாட்கள் வேலை செய்துள்ளார் என்றால் தெரியாது. ID.21/2021 மனுதாரர் பூவரசன்

அவரின் தகுதி காண் பருவத்தில் மொத்தம் 58 நாட்கள் வேலை செய்துள்ளார் என்றால் தெரியாது. ID.24/2021 மனுதாரர் ஹசார் அஹமத் அவரின் தகுதி காண் பருவத்தில் மொத்தம் 88.5 நாட்கள் வேலை செய்துள்ளார் என்றால் தெரியாது. ID.25/2021 மனுதாரர் சரண்குமார் அவரின் தகுதி காண் பருவத்தில் மொத்தம் 83.5 நாட்கள் வேலை செய்துள்ளார் என்றால் தெரியாது. ID.26/2021 மனுதாரர் சஞ்சீவ் குமார் அவரின் தகுதி காண் பருவத்தில் மொத்தம் 131 நாட்கள் வேலை செய்துள்ளார் என்றால் தெரியாது. ID.27/2021 மனுதாரர் வினோத் குமார் அவரின் தகுதி காண் பருவத்தில் மொத்தம் 88.5 நாட்கள் வேலை செய்துள்ளார் என்றால் தெரியாது. ID.28/2021 மனுதாரர் யுவராஜ் அவரின் தகுதி காண் பருவத்தில் மொத்தம் 149.5 நாட்கள் வேலை செய்துள்ளார் என்றால் தெரியாது. ID.30/2021 மனுதாரர் சுரேந்தர்அவரின் தகுதி காண் பருவத்தில் மொத்தம் 55 நாட்கள் வேலை செய்துள்ளார் என்றால் தெரியாது. ID.31/2021 மனுதாரர் தீபக் அவரின் தகுதி காண் பருவத்தில் மொத்தம் 57 நாட்கள் வேலை செய்துள்ளார் என்றால் தெரியாது. ID.32/2021 மனுதாரர் வெங்கடேசன் அவரின் தகுதி காண் பருவத்தில் மொத்தம் 93.5 நாட்கள் வேலை செய்துள்ளார் என்றால் தெரியாது. ID.33/2021 மனுதாரர் இளவரசன் அவரின் தகுதி காண் பருவத்தில் மொத்தம் 108.5 நாட்கள் வேலை செய்துள்ளார் என்றால் தெரியாது. ID.34/2021 மனுதாரர் மணிகண்டன் அவரின் தகுதி காண் பருவத்தில் மொத்தம் 59 நாட்கள் வேலை செய்துள்ளார் என்றால் தெரியாது. ID.37/2021 மனுதாரர் விக்னேஷ் அவரின் தகுதி காண் பருவத்தில் மொத்தம் 56

நாட்கள் வேலை செய்துள்ளார் என்றால் தெரியாது. ID.39/2021 மனுதாரர் ஷோபன் பாபு அவரின் தகுதி காண் பருவத்தில் மொத்தம் 121.5 நாட்கள் வேலை செய்துள்ளார் என்றால் தெரியாது. ID.40/2021 மனுதாரர் கோபி அவரின் தகுதி காண் பருவத்தில் மொத்தம் 118.5 நாட்கள் வேலை செய்துள்ளார் என்றால் தெரியாது. ID.41/2021 மனுதாரர் தினகரன் அவரின் தகுதி காண் பருவத்தில் மொத்தம் 57.5 நாட்கள் வேலை செய்துள்ளார் என்றால் தெரியாது.

Typed to my dictation, read over to interpreted to the witness and acknowledged by him to be correct.

Sd/-S.Sujatha,
Presiding Officer,
Labour Court, Kancheepuram.
Dated: 08.11.2024